ஆர்.எஸ்.பாரதி தலைமை! மாநகராட்சியின் மக்கள் நலப் பணிகளை முடக்கும்

த.வெ.க அரசின் நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன் – நே.சிற்றரசு – மயிலை த.வேலு கூட்டறிக்கை!







சென்னை, அக். 15-

"எல் நினோ" மழையின் தீவிர அபாயங்களை அலட்சியப்படுத்தியும் - மாநகராட்சி பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண்டித்து ஆர்.எஸ்.பாரதி தலைமையில் சைதாப்பேட்டை கலைஞர் பொன் விழா வளைவு அருகில் சென்னை தெற்கு - சென்னை மேற்கு - தென் மேற்கு மாவட்டங்களின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்! இன்று நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன் - நே.சிற்றரசு - மயிலை த.வேலு ஆகியோர் தங்களது கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:-

உலக அளவில், எல்நினோ பொதுவாக வறட்சியை ஏற்படுத்தும் என்றாலும், 2026-ஆம் ஆண்டின் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் தமிழ்நாட்டில் சில பகுதிகளில் இயல்பைவிட மிக அதிக அளவில் மழைப்பொழிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளதாக வானிலை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அதோடு, கோடை வெப்பம், குடிநீர் பற்றாக்குறை மற்றும் கடலோர அரிப்பு போன்ற பேரிடர்களையும் எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி தமிழ்நாடு அரசுக்கு வல்லுநர் குழு பரிந்துரை செய்துள்ளது.

ஆனால், 'ரீல்ஸ் ஆட்சி நடத்தி வரும் த.வெ.க. அரசு' இப்பேரிடர் குறித்து கிஞ்சித்தும் கவலை கொள்ளாமல், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருந்து வரும் நிலையில்,

வருமுன் காப்போம்' என்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தாரக மந்திரத்தின் அடிப்படையில், மக்கள் மீது அக்கறையின்றி குறட்டை விட்டு தூங்கும் அரசான ஆளும் த.வெ.க. அரசினை தட்டியெழுப்பும் வகையில்,

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநகராட்சி பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கியும் வரும் தமிழ்நாடு அரசின் நிர்வாகச் சீர்கேட்டை கண்டித்து, சென்னை தெற்கு - சென்னை மேற்கு - சென்னை தென் மேற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் இன்று (15.10.2026, வியாழக்கிழமை) காலை சரியாக 10 மணியளவில் சென்னை, சைதாப்பேட்டை, 'கலைஞர் பொன்விழா வளைவு" அருகில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்", கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்கள் தலைமையில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா. சுப்பிரமணியன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு - சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் த.வேலு, கழக கல்வியாளர் அணிச் செயலாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., - சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு தலைவர்கள் - மண்டலக்குழு தலைவர்கள்- மாநகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற நாடாளுமன்றக் நிலைக்குழுவின் முதல் கூட்டத்தில் வழக்கறிஞர் கிரிராஜன் எம்.பி. பங்கேற்று வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாகுண்ட ஸ்ரீனிவாசலு ரெட்டி அவர்களுக்குச் சால்வை அணிவித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மக்களின் போராட்டத்தை முடக்கினால் அரசு மீது அதிருப்தி அதிகரிக்கும்!

உயர்நீதிமன்றம் எச்சரிக்கை!

சென்னை, அக்.15-

மக்களின் போராட்டங்களை முடக்கினால் அரசுக்கு எதிரான அதிருப்தி தான் அதிகரிக்கும் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி லட்சுமி நாராயணன் எச்சரித்துள்ளார்.

மயிலாடுதுறை அருகே உள்ள சித்தர்காடு கிராமத்தில் அரிசி ஆலைக்கு எதிராகப் போராட்டம் நடத்த அனுமதி கோரி தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது, மயானத்தில் போராட்டம் நடத்த அனுமதி கேட்டதால்தான் மனு நிராகரிக்கப்பட்டதாக காவல்துறை தரப்பில் வாதிடப்பட்டது. அதற்கு நீதிபதி, மயானத்தில் மக்கள் போராட்டம் நடத்துவதில் காவல்துறைக்கு என்ன பிரச்சினை உள்ளது? என்று சரமாரியாக கேள்வி எழுப்பினார்.

ஆர்.எஸ்.பாரதி தலைமை!
சென்னை மாநகராட்சி வளர்ச்சிக்கு

நிதி ஒதுக்காத த.வெ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

ஆலந்தூர் தெற்குப் பகுதிக் கழகத்தினருக்கு என்.சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை,அக்.15-

ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பெருநகர சென்னை மாநகராட்சி வளர்ச்சிக்கு நிதி ஒதுக்காத த.வெ.க. அரசை கண்டித்து இன்று (15.10.2026 - வியாழக்கிழமை) காலை 10:00 மணி அளவில் சைதாப்பேட்டை கலைஞர் ஆர்ச் அருகில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற இருப்பதால், ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட தலைமை பொதுக்குழு உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. தெரிவித்துள்ளார்.

ரயில்களில் அதிக சத்தத்துடன்

செல்போன் பயன்படுத்தினால் அபராதம், சிறை தண்டனை!

தெற்கு ரயில்வே எச்சரிக்கை!

சென்னை, அக்.15-

ரயில்கள் மற்றும் ரயில் நிலையங்களில் ஹெட் போன் இல்லாமல் செல்போனில் அதிக சத்தத்துடன் இசை கேட்பது, வீடியோக்கள் அல்லது ரீல்ஸ் பார்ப்பது மற்றும் கேம்கள் விளையாடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டால் அபராதம் அல்லது சிறைத் தண்டனை விதிக்கப்படும் என தெற்கு ரயில்வே எச்சரித்துள்ளது.

ரயில்களில் பொது மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தடுப்பதையும், சக பயணிகளுக்கு தொந்தரவு இல்லாத பயணத்தை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு தெற்கு ரயில்வே இந்த முக்கிய உத்தரவை வெளியிட்டுள்ளது.

செல்போனை அதிக சத்தத்துடன் பயன்படுத்துவதால் இடையூறுகள் ஏற்படுவதாக பல பயணிகள் புகார் அளித்துள்ளனர்.

ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் சில பயணிகள் அதிக சத்தத்துடன் செல்போனில் இசை கேட்பது, வீடியோக்கள் மற்றும் ரீல்ஸ் பார்ப்பது அல்லது கேம்களை விளையாடுவது போன்றவற்றில் ஈடுபட்டு மற்றவர்களுக்கு இடையூறு விளைவிப்பதாக தெற்கு ரயில்வே பயணிகள் ஆலோசனைக் குழுவினர் தெரிவித்தனர்.

இதனை அடுத்து, ரயில்கள் மற்றும் ரயில் நிலையங்களில் அதிக சத்தத்துடன் இசை கேட்பது, வீடியோக்கள் அல்லது ரீல்ஸ் பார்ப்பது மற்றும் கேம்கள் விளையாடுவது போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் என பயணிகளை தெற்கு ரயில்வே எச்சரித்துள்ளது.

திருத்தப்பட்ட ரயில்வே சட்டத்தின்படி, விதிமீறலில் ஈடுபடுபவர்களுக்கு 1,000 ரூபாய் அபராதம் அல்லது ஆறு மாதங்கள் வரை சிறைத் தண்டனை அல்லது இவை இரண்டும் விதிக்கப்படலாம். மேலும், எச்சரிக்கைகளை மீறித் தொடர்ந்து இடையூறு விளைவிக்கும் பயணிகளுக்கு 5,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

இது தொடர்பாக அனைத்து ரயில்வே கோட்டங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அபராதத் தொகையை வசூலிக்க டிக்கெட் பரிசோதகர்கள் மற்றும் மூத்த வணிகப் பிரிவு அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

செல்போனில் இசை கேட்கும்போதோ அல்லது வீடியோக்களைப் பார்க்கும்போதோ ஹெட்போன்களைப் பயன்படுத்தவும், தொலைபேசி அழைப்புகளில் பேசும்போது மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பேசவும் பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எல் நினோ மழையின் தீவிர அபாயத்தை அலட்சியப்படுத்தி
மாநகராட்சி பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கிய
தமிழ்நாடு அரசின் நிர்வாக சீர்கேட்டை கண்டித்து
மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



நாள் : 15.10.2026 வியாழக்கிழமை காலை 9 மணி / இடம் : மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில், சென்னை.

கண்டன உரையாற்றுபவர்கள்

திருச்சி என்.சிவா எம்.பி.
நாடாளுமன்ற மாநிலங்களவை குழுத் தலைவர்,
கழகத் துணைப் பொதுச் செயலாளர்

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்

மாதவரம் எஸ்.சுதர்சனம்
சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர்

ஆர்.டி.சேகர்
சென்னை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்

தயாநிதி மாறன் எம்.பி
கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்

கலாநிதி வீராசாமி எம்.பி
கழக அயலக அணி தலைவர்

கண்டனத்துடன் : பிரியா ராஜன்
பெருநகர சென்னை மாநகர மேயர் - தலைமை செயற்குழு உறுப்பினர்